பஸ் நிலையம் முன்பாக
கன்னாகம்
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் ஆசேதகம் ஆ பங்குனி மீ 26 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 27 (08-04-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:121

எமது வழமையான Super Grade ஆசிரியர் குழுவினரால்
88 AUG A/L கணித விஞ்ஞான வகுப்புக்கள்
ஆரம்பம் 18-4-86
வெள்ளி -·0 P.M.
விபரங்கட்கு:
BITSMANS INSTITUTES MANIPAY.

BITSMANS INSTITUTES
MANIPAY
88 AUG A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
எமது Super Grade ஆசிரியர்களால்
ஆரம்பம் 18-4-86
வெள்ளி 9-00 A M.
பொருளியல் - திரு. சின்னத்தம்பி
வர்த்தகம் - திரு. தேவா
கணக்கியல் - திரு. ராஜன்
அளவையியல் - திரு. S. S. மனோகரன்
புவியியல் - திரு. சண்
தமிழ் இந்துநாகரிகம் திரு. பாலா

# தமிழ் அகதிகளுக்கு மேற்கு ஜெர்மனில் தொடர்ந்து புகலிடம்

## அந்நாட்டு அமைச்சர் பேட்டி

பொன், ஏப்ரல் 7

ஜெர்மனியில் ஒரு லட்சத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்.

அவர்களுக்குத் தொடர்ந்தும் புகலிடம் கொடுத்து வருவோம்.

இப்படி மேற்கு ஜெர்மன் பொருளாதார அமைச்சர் டாக்டர் மார்ட்டின் பாங்மான் சொன்னார்.

'ஜெனரல் டிஸ்பிளேமன்' சஞ்சிகைக்கு மார்ச் மாதத்தில் அளித்த பேட்டியில் டாக்டர் பாங்மான் இப்படிச் சொன்னார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

மேற்கு ஜெர்மனியின் பொருளாதாரம் அகதிகள் வருகையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் அகதிகளினால் பெரும்சுமை ஏற்பட்டுள்ளது என்று நாம் முறையிடவில்லை.

இப்படி அமைச்சர் சொன்னார்.

கிறிஸ்தவ ஜனநாயக யூனியனின் வெளிவிவகாரக்குழுத் தலைவர் டாக்டர் ஹான்ஸ சுவார்ஸ் லீபர்மென் சொன்னதாவது:

ஒருநாளில் 100 இலங்கைத் தமிழ் அகதிகளும் வந்துள்ளார்கள்.

அகதிகள் முகாம்களில் தமிழ் அகதிகளுக்கு நல்ல உணவு வழங்கப்படுகிறது. கைச்செலவுக்குப் பணமும் வழங்கப்படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஏப்ரல் 8

மட்டக்களப்பு நொச்சி முனைப் பகுதியில் ரோந்து சென்ற ஆயுதப்படையினர் மீது கிரனேட் வீசியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று மாலை ஐந்து மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது

கிரனேட் வீசியபின்னர் இந்த இளைஞர் தோணி ஒன்றில் ஏறித் தப்பி ஓட முயன்றதாகவும் —

ஆயுதப் படையினர் அவரைக் கலைத்துச் சுட்டதாகவும் —

இளைஞரின் சடலம் மட்டக்களப்பு வாவியினுள் வீழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

# யாழ். டிப்போ பஸ்கள் ஓடவில்லை

## வீதிமறிப்புப் போர் காரணம்

நல்லூர், ஏப் 8

யாழ்ப்பாண டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் ஏதும் நேற்று சேவையில் ஈடுபடவில்லை

கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு முன்னால் மக்கள் வீதிமறியல் போராட்டம் நடத்துவதாலேயே நேற்று பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

ஊழியர்கள் பஸ்களை வெளியே எடுக்க முற்பட்டபோது போராட்டக்காரர்கள் டிப்போக் கதவைத் திறக்க விடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் பருத்தித்துறை, காரைநகர் டிப்போ பஸ்கள் மட்டுமே நேற்று சேவையில் ஈடுபட்டன.

வெளியூர் பஸ்களும் வழமை போல் யாழ்ப்பாணம் வந்து சென்றன

இன்றும் இப்போராட்டம் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

# ஆயுள்வேத கல்லூரி மாணவர் மறியற்போர்

நல்லூர், ஏப் 8

வட இலங்கை சித்த ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்கள் நேற்று மறியற் போராட்டம் நடத்தினர்.

அரச அங்கீகாரம் பெற்ற பரீட்சைகளை நடத்தி அதன்மூலம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களை வழங்க வேண்டும் எனக்கோரியே அவர்கள் நேற்று இந்த மறியற் போராட்டத்தை நடத்தினர்.

சுமார் முப்பதுக்கு மேற்பட்ட பெண்களும் ஆண்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட இலங்கை சித்த ஆயுள்வேதக் கல்லூரி நேற்று முற்று முழுதாக மூடப்பட்டிருந்தது.

அதிபர், விரிவுரையாளர்கள் கல்லூரிக்கு வந்து வீதியில் நின்று வீடு திரும்பினர்.

கல்லூரி வாசலிலும் சுற்றியுள்ள வேலிகளிலும் சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டிருந்தன.

85 ம் ஆண்டு பரீட்சை எடுத்து பதிவுச் சான்றிதழ் கிடைக்காதவர்களும் இப்போராட்டத்தில் குதித்தனர்.

இக்கோரிக்கைகள் நிறைவேறும்வரை தொடர்ந்தும் மறியல் போராட்டம் நடத்தப்படும் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தீவுப்பகுதி மூன்று நாட்களாக இருளில் மூழ்கியுள்ளது

வேலணை, ஏப் 8

கடந்த நான்கு தினங்களாகத் தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டது.

கடந்த சனிக்கிழமை முதல் வேலணை மின் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட இடங்களான புங்குடுதீவு, நயினாதீவு, அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது.

சுன்னாகத்தில் இருந்து பொன்னாலை வழியாகக் காரைநகர் வந்து அங்கிருந்து ஒரு பகுதி கடற்படை முகாமிற்கும் மற்றயபகுதி தீவுப் பகுதிக்குமாக மின் இணைப்புப் பொருத்தப்பட்டிருக்கின்றது.

இந்த மின் இணைப்புப் பொருத்தப்பட்டிருக்கும் மின் கம்பம் காரைநகர் கடற்படை முகாமிற்கு சமீபமாக இருப்பதால் அந்தக் கம்பத்திற்குச் சென்று மின் இணைப்பு வேலைகளைத் திருத்துவதற்கு மின்சார ஊழியர்கள் பயப்படுகிறார்கள்.

இதனால் தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் சீர்திருத்தஞ் செய்ய முடியாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதுசம்பந்தமாக வேலணைப்பகுதி மின் அத்தியட்சகர் ஊர்காவற்றுறை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் தமிழ் எம்.பிக்கள் எழுப்பிய குரல்

புதுடில்லி, ஏப். 7

தமிழர்மீது பெரிய அளவில் தாக்குதலை நடத்தும்படி இலங்கை அரசு இராணுவ தளபதியைக் கேட்டுள்ளது.

இது குறித்து வெளியுறவு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இப்படி இந்திரா காங்கிரஸ் எம். பி திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், அ.தி.மு.க. எம். பி திரு. கே குழந்தைவேலு ஆகியோர் கடந்த திங்கட்கிழமை புதுடில்லி நாடாளுமன்றத்தில் கேட்டுக்கொண்டனர்.

இலங்கையில் தமிழர் வன்செயல்களுக்கு உள்ளாவது குறித்து இரண்டு உறுப்பினர்களும் கவலை தெரிவித்தனர்.

# இலங்கை வங்கி முன்னால் அடையாள மறியற் போர்

## புதன்கிழமையன்று நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

அடகுவைத்தோர் சங்கம் எதிர்வரும் புதன்கிழமை (நாளை) இலங்கை வங்கிக் கிளைகள் முன்பாக அடையாள மறியற் போராட்டம் நடத்த உள்ளது.

மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளவழங்குவதில் தாமதம் காட்டி வருவதைக் கண்டித்தே இந்த அடையாள மறியல் போராட்டம்.

இது சம்பந்தமான முடிவு அடகுவைத்தோர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை செயற்குழுக் கூட்டம் நடந்தது.

இலங்கை வங்கி முன்பாக அடையாள மறியற் போராட்டத்தில் காலை 7 மணிக்கே சகல வாடிக்கையாளரும் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று சங்கம் கேட்டு உள்ளது.

மக்கள் வங்கிக் கிளைகள் முன் நடத்தப்படும் மறியற் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

# தமிழகத்திலிருந்து மன்னாருக்கு 115 பேர்

## அரசு அழைப்பை ஏற்று

மன்னார், ஏப்ரல் 8

தமிழ் நாட்டில் அகதிகளாக இருந்த 115 இலங்கையர்கள் நேற்று மன்னார் திரும்பினார்கள்.

இவர்களில் 32 பேர் பேசாலையைச் சேர்ந்தவர்கள். மிகுதிப் பேர் உயிலங்குளம், மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் மூலம் கிடைத்த அழைப்பைத் தொடர்ந்தே தாம இலங்கை திரும்பியதாக அவர்களில் பலரும் தெரிவித்தனர்.

1985 பெப்ரவரியில் தாம் உயிருக்கு அஞ்சியே தமிழகம் சென்றதாகக் கூறிய அவர்கள் இப்போது நிலைமை திருந்தியுள்ளதாகக் கேள்விப்பட்டே இங்கு வந்ததாகச் சொன்னார்கள்.

தமிழகத்தில் தாம் நன்றாகக் கவனிக்கப்பட்டதாகவும், முகாமில் இட நெருக்கடி ஒன்றே தமக்குக் கஷ்டமாக இருந்ததாகவும் அகதிகள் பலரும் தெரிவித்தார்கள்.

இலங்கை கடற்படையின் 2 படகுகளில் இவர்கள் நேற்றுப் பிற்பகல் மன்னார் வந்து சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானையில் கொள்ளை

வட்டுக்கோட்டை, ஏப் 8

பயங்கர ஆயுதங்களுடன் சென்ற இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கடந்த சனிக்கிழமை இரவு சங்கானை மார்க்கட்டுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம், பொருள்களைக் கொள்ளையடித்தது.

ஓய்வு பெற்ற சுங்கத் திணைக்கள அதிகாரி திரு. க. சௌந்தரநாயகத்தின் வீட்டிலேயே இக் கொள்ளை இடம்பெற்றது.

வீட்டுக்காரரின் மனைவி, பிள்ளைகள் அணிந்திருந்த நகைகள், மோதிரங்கள் ஆகியவற்றைக் கழற்றி எடுத்த கொள்ளையாகள் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

## முச்சந்தி முனி



உரிமைப்போராட்டம் மாறி இனி மறியல் போராட்டமாய் மாறினாலும் ஆச்சரியப்பட ஒண்டுமில்லை எண்டு நினைக்கிறன்...

அந்தளவுக்கு வீதிக்கு வீதி கிராமத்துக்குக் கிராமம் அது இப்ப நடக்குதெண்டாப் பாருங்கோவேன்...!

# இனப் பிரச்சினைக்கும் அக்மீமன தேர்தலுக்கும் தொடர்பு உண்டா?

புதுடில்லி, ஏப்ரல் 7

இனப் பிரச்சினைக்குப் புதிய யோசனைகளை ஜனாதிபதி ஜெயவர்த்தன சமர்ப்பிப்பது அக்மீமன இடைத்தேர்தல் முடிவில் தான் தங்கியுள்ளது.

குடியுரிமை இழந்த பின்னர் திருமதி பண்டாரநாயக்கா முழுமூச்சுடன் பிரசாரத்தில் ஈடுபடும் முதலாவது இடைத்தேர்தல் இது ஆகும்.

தமிழர் பிரச்சினையை மையமாக வைத்தே திருமதி பண்டாரநாயக்கா பிரசாரத்தில் ஈடுபடுகின்றார்.

திரு. ஜெயவர்த்தனவுக்கு இது ஒரு சவாலாக அமைந்து விட்டது.

அக்மீமன தொகுதி சிங்கள மக்கள் வாழும் பகுதி. சுதந்திரக் கட்சிக்கும் யு என் பிக்கும் சரி சமமான மக்கள் பிரிந்து நிற்கும் தொகுதி இது.

புதிய யோசனைகள் திரு. ஜெயவர்த்தனவிடம் இருந்து வருவது என்றால் அது அக்மீமன இடைத்தேர்தல் முடிவில் தான் தங்கியுள்ளது.

இப்படி 'இந்து' நாளிதழில் செய்தி வெளியாகி உள்ளது

# ★ பருத்தித்துறை வீதி ★ பலாலி வீதியில் வீதி மறிப்புப் போர்

## கொள்ளைகளைக் கண்டித்து

நல்லூர், ஏப். 8

பலாலி வீதி, பருத்தித்துறை வீதிகளில் இரண்டாவது நாளாக மக்கள் வழிமறிப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீர்வேலி, கோண்டாவில் பகுதிகளில் இடம் பெற்ற கொள்ளைகளை அடுத்தே மக்கள் இந்த வீதி மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

பாதையின் குறுக்கே கற்களும் மரங்களும் போடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வீதித்தடை காரணமாக இந்தப் பாதைகள் வழியாகச் செல்லும் சகல வாகனங்களும் வேறு பாதையால் தமது பிரயாணத்தை மேற்கொண்டன

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள், பணம் ஆகியவை திருப்பி ஒப்படைக்கப்படும் வரை வழிமறிப்புப் போராட்டம் தொடருமெனவும் கூறப்படுகிறது.

## தீவுப்பகுதியில் ஹெலிக்கொப்டர் ரோந்து

வேலணை, ஏப் 8

தீவுப் பகுதியில் தற்பொழுது ஹெலிக்கொப்டர்களும் யுத்த விமானங்களும் மிகவும் தாழப் பறந்து ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டு வருகின்றன.

ஏற்கனவே காவலூர்ப் பகுதிகளை அடுத்துள்ள பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்கள் பயப்பீதி காரணமாக பாதுகாப்பு இடங்களைத் தேடி அயற் கிராமங்களுக்கு சென்றுள்ளதினால் காவலூர்ப் பகுதி சனநடமாட்டம் குறைந்து காணப்படுகின்றது

## சுபநேரம்

08-04-1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்

10.37 முதல் 12.07வரை

ராகுகாலம்:

3.07 முதல் 4.37 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

அமாவாசை விரதம்

## வரிவிலக்கு

விற்பனை வரியில் இருந்து சிமெந்துக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வர்த்தமானியில் பதில் நிதி அமைச்சர் ஜனாப். எம். எச்.எம். நைனாமரிக்கார் அறிவித்திருக்கின்றார்.

# அரசடிச்சேனை மோதலில் படையினரின் வாகனத்தில் இருந்த 5 பொதுமக்கள் பலி

## முகாம் அருகிற் சடலங்கள் எரிப்பு

மட்டக்களப்பு, ஏப் 8

மட்டக்களப்பு, படுவான்கரை அரசடிச்சேனைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை தீவிரவாதிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் நிகழ்ந்த மோதலில் ஆயுதப்படை வாகனத்தில் இருந்த ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களது சடலங்களை சீருடையினர் கரடியனாறு முகாமுக்கு அருகில் வைத்து எரித்து விட்டனர்.

மோதல் நிகழ்ந்த சமயம் இவர்கள் ஐவரும் ஆயுதப்படையினரின் வாகனங்களுக்குள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களுள் ஒருவர் ஆயுதப்படையினருடன் அவர்களது முகாமிலிருந்தே அவர்களது வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர் என்று கூறப்படுகிறது.

ஏனைய நால்வரும் ரோந்து வந்த படையினரால் ஆயித்தியமலைச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள்.

தீவிரவாதிகளுடன் மோதல் நிகழ்ந்ததையடுத்து இராணுவ வாகனங்களுக்குள்ளேயே ஐவரும் உயிரிழந்தனர்.

ஐவரின் சடலங்களும் கரடியனாறு ஆயுதப்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டன.

அங்கு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ பஞ்சலிங்கம் பிரேதபரிசோதனை செய்தார் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் இறப்பு ஏற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஆயுதப்படை பெருவளர்ச்சி

புதுடில்லி, ஏப் 7

இலங்கை ஆயுதப் படைகள் பெருவளர்ச்சி கண்டுள்ளன.

புதுடில்லியில் தங்கியிருந்து கொண்டு இலங்கைக்கும் தூதுவர்களாக இருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் இக்கருத்தை வெளியிட்டதாக 'இந்து' செய்தி பிரசுரித்துள்ளது.

# மூதூர், குச்சவெளிக்கு வெளியார் செல்லத்தடை

கொழும்பு, ஏப். 8

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளுக்கு வெளியார் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பிரிவின் உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் அடையாளக் கார்ட் வைத்திருப்பவரே இப்பகுதிக்குச் செல்லலாம் அல்லது தங்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின்கீழ்தான் இவ்விதிகள் அமுலாக்கப்படுகின்றன.

# புத்தாண்டை முன்னிட்டு வவுனியா வரை விசேட ரயில் சேவை

## யாழ்ப்பாணத்திற்கு இணைப்பு பஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

கொழும்பில் இருந்து வவுனியா வரை ஏப்ரல் 11, 12 ஆம் திகதிகளில் விசேட ரயில் சேவையை நடத்த ரயில்வே திணைக்களம் முன் வந்துள்ளது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஒட்டியே இந்த விசேட ரயில் சேவைகள் நடத்தப்படும்.

விசேட ரயில் சேவை நடைபெறும் தினங்களில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இணைப்பு பஸ் சேவைகளும் நடத்தப்படும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகாவை நோகடித்தவர் காலில் வந்து விழுவாராம்

'என்னைப்பற்றி கேவலமாகப் பேசுபவர்கள் ஒரு நாள் கடவுளின் தண்டனையை அடைந்துதான் தீருவார்கள். இதை நானே கண்கூடாகப் பார்த்தும் இருக்கிறேன்' என்கிறார் அம்பிகா.

அம்பிகா இதுபற்றி மேலும் கூறுகையில்; நான் சின்னப்பெண்ணாக இருந்தபோது ஒரு பெரிய ஹீரோயின் என்னை மேடையில் வைத்து 'இன்சல்ட்' செய்து விட்டார்

எனக்கும் ஒரு காலம் வராதா என்று காத்திருந்தேன். காலமும் வந்தது.

அதே நடிகை எனக்குப் போன் செய்து 'அம்பிகா நீதான் இப்போது நிறையப் படங்களில் நடிக்கிறியே, எனக்கும் சில படங்களைச் சிபார்சு செய்யக் கூடாதா?' என்று கேட்டார்.

அப்போது பழைய சம்பவத்தை நினைவுபடுத்தி இரண்டு வார்த்தை கேட்டுவிடுவோமா என்று நினைத்தேன் ஆனால் பழிவாங்கும் உணர்வு வரவில்லை.

என்னை நோகடித்தவர்கள் நிச்சயம் என் காலில் வந்து விழுவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் இருக்கிறது.

சிவாஜி கணேசனைப் பற்றி எப்படி எல்லாம் பேசினார்கள். இந்திரா காந்தி அம்மாவைப் பற்றி எப்படி எல்லாம் பேசினார்கள்.

மக்கள் திலகம் எம். ஜி ஆரைப்பற்றி மோசமாகப் பேசவில்லையா?

இவ்வளவு பெரியவர்களைப் பற்றி எல்லாம் கேவலமாகப் பேசும்போது நம்மைப் பற்றி பேசுவது என்ன பெரிய விஷயமா என்று நினைத்துக் கொண்டு மனதை ஆறுதல் படுத்திக் கொள்வது உண்டு.

மகாத்மா என்று கூப்பிட்டுவிட்டுத் சுட்டுக்கொன்றார்கள். சுட்டவனுக்குப் பெயர் கிடைக்கவில்லை. யார் வேண்டுமானாலும் கோட்சே ஆகலாம். யாராலும் மகாத்மா ஆகமுடியாது!

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் கவலைப்பட போவது இல்லை. நான் எனக்காகத்தான் வாழ்கிறேன். மற்றவர்களுக்காக அல்ல.

பொறுமையினால் சிலர் எதிரிகள் ஆகலாம். அதைப்பற்றி கவலைப்படவில்லை' என்றார்.

தினசரி சினிமா

## ஜப்பானில் மாநாடு

புதுடில்லி, ஏப்ரல் 7

குடிசனச் செறிவு, அபிவிருத்தி ஆகியவை தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர் மட்ட அங்கத்துவ நாடுகள் மாநாடு ஜப்பானில் நடைபெறுகிறது.

டோக்கியோவில் நடைபெறும் இந்த மாநாட்டில் 34 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள்.

இந்த மாநாட்டில் முன்னாள் பாரத வெளியுறவு மந்திரி திரு. ஸ்வரன்சிங் பங்கு கொள்கிறார்.

# பிலிப்பீன்ஸில் அமெரிக்க அமைச்சர்

### ஜனாதிபதி கொரசன் அக்கியூனோவுடன் இராணுவ உதவிபற்றி பேசுகிறார்

லண்டன், ஏப்ரல். 7

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி கஸ்பார் வெயின் பேகர் பிலிப்பீன்ஸ் சென்றுள்ளார்.

பிலிப்பீன்ஸ் அரசுக்கு இராணுவ உதவிகளை அமெரிக்கா வழங்குவது தொடர்பான விடயங்களை ஜனாதிபதி கொரசன் அக்கியூனோவுடன் அவர் ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருமதி அக்கியூனோ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்து பிலிப்பீன்ஸுக்கு வந்த அமெரிக்க உயர் அதிகாரி வெயின் பேகர்.

ஆசிய நாடுகளிலும், அவுஸ்திரேலியாவிலும் 2 வார சுற்றுப்பயணத் திட்டத்திலேயே வெயின் பேகர் பிலிப்பீன்ஸ் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தப் பிராந்திய நாடுகளில் அமெரிக்க இராணுவ உதவிகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களை நுணுக்கமாக ஆராய்வதற்கே பாதுகாப்பு அமைச்சர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

அமைச்சர் வெயின் பேகர் பிலிப்பீன்ஸில் பயணம் மேற்கொண்டுள்ள இவ்வேளையில் அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மத்திய கிழக்கில் பயணம் மேற்கொண்டுள்ளார். சவூதி அரேபிய மன்னரையும் மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்துகிறார்

எண்ணெய் விவகாரப் பேச்சுக்களில் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளி உலகில்

## ஷோப்ராஜ் மீண்டும் கைது

புதுடில்லி, ஏப்ரல் 7

திகார் சிறையிலிருந்து தப்பிச் சென்ற குற்றக் கைதி சார்ள்ஸ் ஷோப்ராஜ்ஜை பொலீஸார் மீண்டும் கைது செய்துள்ளனர்.

மகாராஷ்டிர பொலீஸ் அதிகாரி தலைமையிலான கோஷ்டியே மேற்படி குற்றவாளியைக் கைது செய்தது

சென்றமாதம் 16 ஆம் திகதி திகார் சிறையிலிருந்து ஷோப்ராஜும் வேறு 6 கைதிகளும் தப்பிச் சென்றது தெரிந்ததே.

1976ஆம் ஆண்டு முதன்முதலாக பாலம் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஷோப்ராஜ் சர்வதேச போதைப் பொருள்கள் கடத்தல்குற்றவாளி.

'இன்டர் போல்' என்ற சர்வதேச பொலீஸ் பிரிவும் ஷோப்ராஜை அகப்படுத்த வலை விரித்து வந்துள்ளது.

## பங்களாதேஷ் தேர்தல்

## 7 கட்சிகள் கூட்டணி போட்டியிடவில்லை

டாக்கா, ஏப்ரல் 7

பங்களாதேஷில் மே மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எதிரணிகளில் ஒன்றான 7 கட்சிகள் கூட்டணி போட்டியிடவில்லை

பங்களாதேஷ் தேசியவாதிகள் கட்சி தலைமையிலான இந்த அணி இராணுவச் சட்டம் நீக்கப்படாத பொதுத் தேர்தல் அர்த்தமற்ற ஒன்று எனத் தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில்பங்களாதேஷ் ஆளும் இராணுவ அரசு ஆதரவு வேட்பாளர்களும் மற்றும் எதிரணியான 15 கட்சிகள் கூட்டணியும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தேர்தல் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதிநாள் நேற்றுடன் முடிவடைந்து விட்டது.

## அணிசேரா நாடுகளின் நிபுணர் குழுக் கூட்டம்

### புதுடில்லியில் ஆரம்பம்

புதுடில்லி, ஏப்.7

அணிசேரா நாடுகளிடையேயான பொருளாதார ஒத்துழைப்புக்கான நிபுணர் குழுவின் 5 வது தொடர் கூட்டம் புதுடில்லியில் ஆரம்பமாகியது.

சமூக பொருளாதார மற்றும் இப்பிராந்தியங்களின் சமாதான மேம்பாட்டுக்குமான விடயங்களை இந்தக் குழு நிலைக் கூட்டம் ஆராயும்.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 19ஆம்திகதி வரைபுதுடில்லியில் நடைபெற இருக்கும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகள் பரிசீலனைக்காக முன்வைக்கப்படும்.

நாடுகளின் உள்துறை தொடர்பான பல விவகாரங்களும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என மேலும் நம்பப்படுகிறது.

## விமான நிலையங்களில் கட்டுப்பாடு

சென்னை, ஏப் 7

பாரதத்தின் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி விமான நிலையங்களில் தனிக் கட்டுப்பாடுகள் கடுமையாக அமுல் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## குருத்துவார் யாத்திரை

புதுடில்லி, ஏப். 7

பாகிஸ்தானிலுள்ள சீக்கிய மத வழிபாட்டுக்கான குருத்துவார் சென்று வர பாதயாத்திரிகர்களுக்கு பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக ரயில் சேவை ஏற்பாடு செய்யப்படும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருமைப்பாடு பேண புதிய பாரத அமைப்பு

### பிரதமர் ராஜீவ் தலைமையில் இன்று கூடுகிறது

புதுடில்லி, ஏப் 7

புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ள பாரத தேசிய ஒருமைப்பாட்டுச் சபை செவ்வாய் புதுடில்லியில் கூடுகிறது.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் பஞ்சாப் கலவர நிலைமைகள் கருத்திற் கொள்ளப்படும்.

பஞ்சாப் மாநிலத்தில் பெருகிவரும் வன்முறைகளைத் தணித்து அமைதி மற்றும் சமூக ஒற்றுமை நிலையை உறுதிப்படுத்த பல தரப்பு முயற்சிகளையும் எவ்வாறு மேற்கொள்வது என்ற விடயங்களும் விரிவாக இந்த மாநாட்டில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாரத அரசின் சிறப்பு அம்சமான மதச்சார்பற்ற அரசியல் உறுதிப்பாடு மேலும் வலுவடையக் கூடிய நடவடிக்கைகள் பற்றியும் மாநாடு ஆராயும்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் டில்லி சென்று உள்ளார்.

முதலமைச்சருடன் தமிழ்நாடு மின்சக்தித் துறை அமைச்சர் இராமச்சந்திரனும் உடன் சென்றுள்ளார்.

## தெ. ஆபிரிக்க இராணுவ விமானம் அங்கோலா சுட்டு வீழ்த்தியது

### அப்படி நடக்கவில்லை என பிரிட்டோரியா மறுப்பு

லண்டன், ஏப். 7

தென் ஆபிரிக்க இராணுவ விமானம் ஒன்றை அங்கோலா சுட்டு வீழ்த்தி விட்டது

இந்த விமானம் தெ. ஆபிரிக்க இராணுவ சேவைப் போக்குவரத்து விமானம் எனவும் அங்கோலா அரசு எதிர்ப்புப் படையான ஜூனிடா துருப்புகளை பரசூட்களில் இறக்கி ஏற்றும் வேலைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தென் ஆபிரிக்காவின் 5 இராணுவ சேவை விமானங்கள் இந்தவேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாக அங்கோலா இடதுசாரி அரசு மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

எனினும் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்ற அங்கோலா அரசின் அறிவிப்பை தென் ஆபிரிக்கா நிராகரித்துள்ளது.

## பாடசாலை மட்டத்தில் தொழில் நுட்பக் கல்வி

### அவசியத்தை வலியுறுத்துகிறார் பணிப்பாளர்

மானிப்பாய், ஏப் 8

பாடசாலையைவிட்டு வெளியேறும் மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் வைத்தே தொழில் நுட்பக்கல்விக்கான வாய்ப்புக்களையும், ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்விக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த மதியபோசன விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கூறினார்

மேற்படி பாடசாலை ஒன்றியத் தலைவர் திரு சி. ஜெயக்குமார் விழாவுக்கு தலைமை வகித்தார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. என் தனஞ்செயன் அங்கு உரையாற்றுகையில், உயர்தர வகுப்பு மாணவர்கள் புவியியல், சரித்திரம் போன்ற பாடங்களில் இப்போது அதிகம் நாட்டம் செலுத்துவதில்லை எனக் கவலை தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு வி. பொன்னுத்துரை, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. மஹேஸவேலு, கம்பன் கழக உறுப்பினர் திரு. என். கணேசமூர்த்தி, மானிப்பாய் இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவன் செல்வன் ரி. டொமினிக் ரவீந்திரராஜா, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர்வகுப்பு மாணவன் செல்வன் எஸ். சற்குணநாதன், மெமோரியல் பாடசாலை முன்னாள் உப அதிபர் திரு. டபிள்யூ ஜீ அன்னப்பா ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினர்.

## கம்பர்மலையில் கால்நடைகளுக்கான சினைப்படுத்தும் நிலையம்

உடுப்பிட்டி, ஏப் 8

கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்தில் கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பர்மலை கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள தொம்மந்துறை, வல்வெட்டி, உடுப்பிட்டி, நவிண்டில் ஆகிய கிராமங்களிலும் உள்ள கால்நடை வளர்ப்போரின் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த செயற்கை முறைச்சினைப் படுத்தும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

நல்ல இனங்களை விருத்தி செய்யவும், நோய் தொடிகளிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கவும் சினைப் படுத்தும் உத்தியோகத்தர் தி. இந்திரனின் உதவியுடன் இந்நிலையம் இயங்கி வருகிறது.

இந் நிலையத்தின் மூலம் 'இ பில் இபில்' கன்றுகளும் டசும் புல் துண்டங்களும் குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றன.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### குறுகிய தூரத்தில் முகாம்கள்

# யாழ். குடாநாட்டில் மக்கள் பாதுகாப்பாக வாழ்வது எப்படி?

### பிரசைகள் குழு ஜனாதிபதியிடம் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு முகாம்கள் குறுகிய தூர இடைவெளிகளில் அமைந்து உள்ளன.

அப்படி இருக்கையில் பாதுகாப்பு அமைச்சு முகாம்களுக்கு தொலைவில் இருக்குமாறும் இல்லையேல் தாக்குதலின் போது பாதிக்கப்பட்டால் மக்களே பொறுப்பு என்று எச்சரிக்கிறது.

அப்படியானால் யாழ்ப்பாணத்தில் மக்கள் எங்கு பாதுகாப்பாக வாழ முடியும்?

இப்படி புன்னாலைக்கட்டுவன் பிரசைகள் குழு, ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கேட்டுள்ளது.

மகஜர் வருமாறு:

முழு அளவிலான தாக்குதல்களை படையினர் நடத்த இருப்பதால் முகாம்களுக்கு அருகில் குடியிருப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை எமது குழு பரிசீலனை செய்தது.

சனஅடர்த்தி நிறைந்த யாழ் மாவட்டத்தில் சுமார் 3—5 மைல் தூரத்திற்கு பாதுகாப்பு முகாம்கள் உள்ளன.

அப்படி இருக்கும்போது எப்படி மக்கள் பாதுகாப்பான இடங்களைக் கண்டுபிடித்துச் செல்ல முடியும்?

அரசாங்கம்தான் மக்களுக்குப் பாதுகாப்பான இடங்களைத் தெரிவு செய்து கொடுக்க வேண்டும் என்பதே எமது திட்டவட்டமான கருத்தாகும்.

மாவட்டத்தில் 90சதவீதமான மக்கள் ஏழைகள்.

பாதுகாப்பு அமைச்சின் எச்சரிக்கை கருத்துடன் விடுக்கப்பட்டதாக இருந்தால் மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குரிய மாற்று ஒழுங்குகளைச் செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

படையினரின் நடவடிக்கைகள் மனித, சமய உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளன.

பலாலிப் பகுதிகளில் மார்ச், 27, 28, 29 ஆம் திகதிகளில் நடந்த ஹெலிக்கொப்டர் தாக்குதலகள் ஆத்திரமூட்டப் படாமலே நடந்தன.

இச்சம்பவங்களில் விவசாயிகள்தான் கொல்லப் பட்டனர்; காயம் அடைந்தனர்.

ஹெலிக்கொப்டரில் இருந்து அசிட்டும் ஊற்றப்பட்டது. பீரங்கிகளாலும் துப்பாக்கிகளாலும் கோயில்களும் தாக்கப்படுகின்றன. தொண்டமானாறு சந்நிதி கோயிலில் ஆறு பக்தர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள்பற்றிய உண்மைகள் உங்களுக்கு சரிவர தரப்படவில்லை என்றே நாம் நம்புகின்றோம்.

யாழ். குடாநாட்டில் நடைபெறும் சம்பவங்கள் திரிக்கப்பட்டே வெளியிடப்படுகின்றன.

மனித உரிமையின் காவலர் என்ற முறையில் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மனிதஉயிர்கள், உடைமைகள் அழிக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்.

இனப் பிரச்சினைக்கு கௌரவமான, சமத்துவமான தீர்வு காணுங்கள். மக்கள் அழிக்கப்பட்ட பின்னர் — நிலம் பாலைவனமாக்கப்பட்ட பின்னர்—காணப்படும் தீர்வினால் எவருக்கும் பிரயோசனம் கிடையாது.

இப்படி புன்னாலைக்கட்டுவன் பிரசைகள்குழு, ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கூறியுள்ளது

## கோப்பாயில் நடந்த கண் சிகிச்சை முகாம்

### 50 பேருக்கு பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப் 8

கண்பார்வை சிகிச்சை முகாம் ஒன்று கோப்பாய் லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் கோப்பாயில் நடத்தப்பட்டது

கண் நிபுணர் டாக்டர் எ. அருணாசலம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இந்த முகாமை நடத்தினார்.

வந்திருந்த 102 பேரில் முதலில் சமுகமளித்த 50 பேர்கள் மட்டுமே அன்றைய தினம் பரிசோதிக்கப்பட்டனர்

ஏனையோருக்கு அடுத்த முகாம்களில் கண்பரிசோதனை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது

இக்கண் சிகிச்சை முகாமை நடத்த 106பி லயன்ஸ் கழக மாவட்ட தலைவர் டாக்டர் சமால் இஸ்மாயில் பெரிதும் உதவி புரிந்தார்.

கண்பார்வை குறைந்தவர்களுக்கான கண்ணாடிகளையும் டாக்டர் இஸ்மாயிலே வழங்கியுள்ளார்.

இத்தகவல்களை கோப்பாய் லயன்ஸ் கழகச் செயலாளர் திரு. சுரேந்திரன் முகேந்திரன் தெரிவித்தார்.

## கலாசார சீரழிவுகளை தடுக்க வேண்டும்

### காவலூர் இலக்கியவட்டம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 8

''ஏகாதிபத்திய கலாசார சீரழிவுகளைத் தடுப்போம்'' என்ற தலைப்பில் காவலூர் இலக்கிய வட்டம் அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை வருமாறு;

தேசிய இனநெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள காலம் இது.

இக்காலத்தில் தமிழ் மக்களை தேசிய உணர்வுகளில் இருந்து மழுங்கடிக்கத்தக்க வகையில் மினி சினிமாக்களும் தனியார் ஒளிபரப்புகளும் இடம்பெறுகின்றன இதுகவலை தருகிறது.

இத்தகைய கலாசார சீரழிவுகள் ஏகாதிபத்திய நாடுகளினால் வேண்டும் என்றே மூன்றும் உலக நாடுகளில் திணிக்கப்பட்டமை வரலாறு தரும் உதாரணமாகும்.

இன்றைய காலகட்டத்தில் இக்கலாசார சீரழிவுகள் எமது தேசிய கலை, கலாசாரத்தை பாதிக்கின்றன. அத்துடன் இன்றைய காலகட்டத்தில் மக்களை தேசிய விடுதலை உணர்வுகளில் இருந்து அந்நியப்படுத்துவதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சி, ஒழுக்க மனோபாவங்களையும் இவை பாதிப்பதாக உள்ளன.

தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு செம்மையான கலாசார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும்படி மினிசினிமா உரிமையாளர்கள் தனியார் ஒளிபரப்பாளர்களை வேண்டுகின்றோம்.

இப்படி காவலூர் இலக்கிய வட்டத்தின் அறிக்கை கூறுகிறது.

## மின்வசதி

புங்குடுதீவு, ஏப். 8

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் கோட்டைக்காடு வீதி இரண்டாம் பிரிவுக்கு மின் வசதி விரைவில் கிட்டவிருக்கிறது இதற்கான ஒழுங்குகளை மின்சார சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் இப்பிரிவில் உள்ள சுமார் 30 வீடுகள் மின் வசதி பெறவுள்ளன.

## புகையைக் கக்கிய தீப்பிழம்பு கீழே விழுந்ததும் வெடித்தது

### நடந்து வந்தவர் இரத்தவெள்ளத்தில் கிடந்தார்

நல்லூர், ஏப். 8

கரும்புகையைக் கக்கிய வண்ணம் தீப் பிழம்பு போன்ற ஒரு பொருள் 'ஸ்' என்ற சத்தத்துடன் வந்து விழுந்து வெடித்ததைக் கண்டேன்.

பின்னர் சற்று நேரத்தில் காலஞ்சென்றவர் அங்கு இரத்த வெள்ளத்தில் கிடப்பதையும் கண்டேன்.

நேற்று முன் தினம் அண்ணா சிலையருகே 'ஷெல்' தாக்கி மரணமான சேவியர் சகாயரூபனின் (29 வயது) மரணவிசாரணை நேற்று நடைபெற்றது.

மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் நடத்தினார்.

மரணவிசாரணையில் சாட்சியமளித்த இவரது சகோதரரான அந்தோனிப்பிள்ளை யோசப் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் சாட்சியத்தில் தெரிவித்ததாவது!

நேற்றுக் காலை 10.30 மணிபோல் நானும் இன்னொருவரும் கடற்கரை வீதியில் உள்ள கடை ஒன்றில் நின்றோம்.

அப்பொழுது கோட்டைப் பக்கமாக இருந்து பேரிரைச்சலுடன் நெருப்புப் போன்ற ஒரு பொருள் வந்து கொண்டிருந்தது.

அப்பொழுது காலஞ்சென்றவரும் அண்ணா சிலையருகே நடந்து வந்து கொண்டிருந்தார்.

திடீரென அந்தத் தீப் பிழம்பு விழுந்து வெடித்தது.

பின்னர் காலஞ்சென்றவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

இப்படி அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

தேவைகளைப் பெருக்கிக் கொள்ளாதீர்கள். ஆடம்பரத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எதிரிகள் டாம்பீகமும் ஆசையுமே.
-சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 15, சேமர் ஒழுங்கை, பிக்கேர் நிலையம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24805 22073
08.14-86 தலை 25

## பாதுகாக்கும் பொறுப்பு

புன்னாலைக்கட்டுவன் பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து அரசாங்கத்துக்கோ, அமைச்சர்களுக்கோ அல்லது ஜனாதிபதிக்கும் தானே மகஜர்கள் எழுதுவதால் பலன் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பது எமது கருத்து.

காரணம் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையோ அல்லது அரசியல் பிரச்சினைகளையோ நீதி, நியாயம் பேணித் தீர்த்து வைக்க வேண்டும் என்ற விருப்பம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கேற்ற விதத்தில் அதன் நடவடிக்கைகளும் இல்லை.

எனினும் விளைவை — பலனை எதிர்பாராமல் இங்கு நடக்கும் அக்கிரம, அநியாயங்களையும் அத்துமீறல்களையும் அரசின் மனிதாபிமானம் இல்லாத நடவடிக்கைகளையும் அரச உயர் மட்டத்துக்கு எழுத்தில் தெரிவிப்பதால் நஷ்டம் எதுவுமில்லை அல்லவா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அயலில் உள்ள பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அகன்று செல்லுமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டிருக்கிறது.

குடாநாட்டின் பல பகுதிகளில் மூன்று நான்கு மைல்களுக்கு ஓர் இராணுவ முகாம் உள்ளது. அப்படியானால் அவற்றைச் சுற்றிவர உள்ள மக்களுக்கு எந்த இடம் பாதுகாப்பு? அவர்கள் எங்கே செல்வது? அரசாங்கம் தான் பாதுகாப்பான இடங்களைத் தேடித் தரவேண்டும்.

புன்னாலைக்கட்டுவன் பிரசைகள் குழுவின் மகஜரில் உள்ள பிரதான விடயம் இது தான். அது அர்த்தபுஷ்டியானது

போராளிகள் முகாம்களைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தும்போது மக்கள் பாதிக்கப்படலாம். ஆகையால் அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாதிருந்து பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு அவர்களே பொறுப்பாளிகளாக வேண்டும்.

இது தான் பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பும் வியாக்கியானமும்.

மக்கள் நலனில் அக்கறை உள்ள பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் எதுவும் இப்படிச் சொல்லுமா?

மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பு அரசுடையது. ஆனால் இலங்கை அரசைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தனது பொறுப்பல்ல என்று அது நினைக்கிறது.

படைகளின் பாதுகாப்புக்கும், தனது சௌகரியத்துக்கும் ஏற்றாற்போல் தமிழ் மக்கள் கஷ்டப்பட்டு இன்னலுற வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறது. அப்படித்தானே?

போராளிகள் தாக்காத நேரத்தில், ஆத்திரமூட்டாத வேளையில் படையினர் தேடுதல் என்றும், ரோந்து என்றும் பொது மக்களைக் கொல்கிறார்களே! அவற்றை எப்படித் தவிர்ப்பது? அப்போது பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பு யார்? அவர்களே தானா?

அரசாங்கத்தின் நோக்கு, போக்கு, நடவடிக்கைகள் யாவற்றினதும் கூட்டு மொத்தம் ஒன்றுதான்.

தீவிரவாதத்தை ஒழிப்பதாகக் கூறி தமிழர்களை, அவர்களில் ஒரு பகுதியினரையாவது அழித்து விடுவது தான். இல்லையேல் அது இத்தகைய அறிக்கைகளையும், வியாக்கியானங்களையும் தெரிவிக்க ஏது என்ன?

அவ்வாறான எண்ணம் அரசுக்கு இல்லை என்று நிரூபிக்க வேண்டுமானால், ஆயுதப் படைகளை வடக்கு, கிழக்கில் இருந்து வாபஸ் பெற்றுவிட்டு, உடன் அரசியல் தீர்வு ஒன்றைத் தேடவேண்டும். செய்யுமா?

# எமது இலட்சியத்தை சிங்கள மக்களுக்கு உணர்த்த போராடுகிறோம்

## 'ஜென்டில்மன்' பத்திரிகைக்கு பிரபாகரன் பேட்டி

அடக்குமுறைக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களுக்கு அரசியல் விடுதலை பெற்றுக் கொடுப்பதைத் தவிர வேறு சிந்தனையே எனக்கு இல்லை.

இப்படிக் கூறுகின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி திரு வேலுப்பிள்ளை பிரபாகரன். இந்தியாவில் இருந்து வெளிவரும் ஆங்கில மாத இதழ் 'ஜென்டில்மன்'.

'ஜென்டில்மன்' சஞ்சிகையின் மார்ச் மாத இதழுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட கருத்தை திரு. பிரபாகரன் வெளியிட்டார்.

பேட்டி கண்டவர் ஜஸ்விந்தர் சிங். அப்பேட்டியின் ஒரு பகுதியே இன்று பிரசுரமாகிறது.

கேள்வி: ஆயுதங்களைத் தூக்குவதற்கு எது உங்களை நிர்ப்பந்தித்தது?

பதில்: தமிழர்களின் அவலநிலைதான் என்னை ஆயுதம் தூக்க வைத்தது.

அப்பாவி மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட மனிதத்தன்மையற்ற செயல்களினால் நான் ஆத்திரம் கொண்டெழுந்தேன்.

எமது மக்கள் ஈவிரக்கமற்ற முறையில் கொலைப்படுவது, அங்கஹீனர்களாக்கப்படுவது, அவர்களின் உடைமைகள் அழிக்கப்படுவது ஆகியன எமது இனம் திட்டமிடப்பட்ட இனக் கொலைக்கு ஆளாகியுள்ளது என்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

ஓர் இனத்தையே அழிப்பதில் ஈடுபட்டுள்ள சர்வாதிகார பாஸிஸ அரசு ஒன்றில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க, அவர்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என நான் உணர்ந்தேன்.

கேள்வி: உங்களுடைய குறைகளை நாடாளுமன்ற ஜனநாயக அடிப்படையிலும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு உட்பட்ட முறையிலும் தெரிவித்து இருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

பதில்: தமிழ் மக்கள் கடந்த மூன்று தலைமுறைகளாக தங்கள் குறைகளை நாடாளுமன்றத்தில் தெரிவித்து வந்தார்கள். அவர்களின் குரல்கள் வனாந்தரத்தில் எழுப்பியது போன்றதாக கேட்பாரற்று போயின.

எமது மக்கள் தங்கள் அபிலாஷைகளை பலனளிக்கக்கூடிய முறையில் முன்வைக்கக்கூடியதாக இலங்கையில் நாடாளுமன்ற ஜனநாயகம் இல்லை.

பெரும்பான்மையின் சர்வாதிகாரத்தன்மை பொருந்திய நாடாளுமன்றத்தில் ஆதிக்கவெறி கொண்ட சட்டங்கள் தான் நிறைவேற்றப்படுகின்றன.

இறுதியில் நாடாளுமன்றத்தில் பங்குபற்ற முடியாதபடி தமிழ்ப் பிரதிநிதிகள் தடை செய்யப்பட்டார்கள்.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லை. பத்திரிகைகள் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ளன.

தங்கள் குறைகளை வெளிப்படுத்தக்கூடிய ஜனநாயக நிறுவனங்கள் இல்லை.

கேள்வி: மக்கள் ஆதரவை, சிங்கள மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள முயற்சித்தீர்களா?

பதில்: சிங்கள மக்களின் ஆதரவு கிடைக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

எமது இலட்சியம் நியாயமானதும், சட்டபூர்வமானதுமாகும்.

இதற்கு சிங்கள மக்களின் ஆதரவை எம்மால் பெற முடியாது உள்ளது.

தமிழருக்கு எதிராக சிங்கள மக்களின் மனதில் நஞ்சூட்டும் வேலையைப் பௌத்தகுருமாரும் சிங்கள அரசியல் வாதிகளும் செய்வதே அதற்குக் காரணம்.

இருந்தும் எமது சட்டபூர்வமான இலட்சியம் பற்றி சிங்கள மக்களுக்கு உணர்த்த நாம் தொடர்ந்து போராடுகிறோம்.


பிரபாகரன்

கேள்வி: தற்போதுள்ள பிளவைவிட, தமிழ் சிங்கள மக்கள் ஒரே விதமான சமூக, பொருளாதார அபிலாஷைகளை கொண்டுள்ளார்கள் என்று நீங்கள் எண்ணவில்லையா?

பதில்: ஆம், அது உண்மை சாதாரண சிங்கள, தமிழ் மக்கள் அடக்கு முறைக்கு உட்பட்டுள்ளார்கள்; சுரண்டப்படுகிறார்கள். பொதுவான சமூக, பொருளாதார பிரச்சினைகளும் அபிலாஷைகளும் தமிழ்-சிங்கள மக்களுக்கு உண்டு.

தேசியப்பிரச்சினை இரண்டு இனங்களையும் பிரிக்கின்றது

ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக சிங்கள ஆளும் வர்க்கம் தமிழ்-சிங்கள மக்களைப் பிரிக்கும் தேசிய முரண்பாட்டை உருவாக்கியுள்ளது

கேள்வி: போராளிகள் வரிசையில் உங்களைச் சேரத் தூண்டிய சூழ்நிலை என்ன?

பதில்: தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கொடுமைகள் பற்றி இளம் வயதில் எனக்குக் கூறப்பட்டது.

மாணவனாக இருந்த போது இனப்பாரபட்சத்தை நேரடியாகக் கண்டேன்.

தமிழ் இனத்தைச் சூழ்ந்துள்ள அரசஅடக்குமுறை பற்றிய உண்மை வலை எனக்கு இளம் நியதில் தெரியவந்தது.

ஆகவேதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்து ஆயுதப் போராட்டத்தில் பங்கு பற்றினேன்.

(தொடரும்)

## பழைய மாணவர் சங்க ஆண்டு விழா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழா எதிர்வரும் 12ந் திகதி சனிக்கிழமை 8.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. க. நாகராசா இவ்விழாவிற்குத் தலைமை வகிப்பார்.

இளைப்பாறிய அதிபர் திரு. வே. கந்தையா அவர்கட்கு சேவை நலன் பாராட்டுவிழாவும் அன்றைய தினம் நடைபெற உள்ளது.

## டானியல் ஒரு போராளி போராட்டமே அவர் வரலாறு

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

கரவெட்டி, ஏப். 8

அமரர் டானியல், தான் நேசித்த மக்களைப் பிரிந்து விலகிப் போகவில்லை. கடைசி வரைக்கும் கீழ்த்தட்டு மக்களுக்காகவே வாழ்ந்து தன் இலட்சியத்தைச் சாதித்தார்.

அவர் வாழ்நாள் முழுவதும் போராளியாக இருந்தார். போராட்டமே அவரது வரலாறு.

தனது கருத்துக்களை வருங்காலத்தில் இலக்கிய எதிரிகளும் அரசியல் எதிரிகளும் திரித்துக் கூறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

—இவ்வாறு எழுத்தாளர் திரு தெணியான் வதிரி தமிழ் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அமரர் கே. டானியலின் அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

தமிழ் மன்றத் துணைத் தலைவர் திரு மு. க. கமலாகரன் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. நெல்லை க. பேரன் பேசுகையில், வடமராட்சி மண்ணின் மீதும் மக்கள் மீதும் அசையாத அபிமானமும் நம்பிக்கையும் கொண்ட அமரர் டானியல் தமது 'தண்ணீர்' என்ற நாவலில் கரவெட்டி தண்ணீர்ப் பிரச்சினையை அழகாக எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. வ. க. பாலசிங்கம் பேசுகையில், சாதாரணமாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய டானியல் படிப்படியாக உயர்ந்து இலக்கிய மேதையாகி விட்டார் என்றார்.

சட்டத்தரணி திரு. செ. பேரின்பநாயகம் பேசுகையில், "டானியலின் தனி மனிதத்திறமையும் செழுமையும் இல்லாவிட்டால் புதிய மரபுகள் தோன்றியிருக்காது. இவரது மரபுகள் பற்றிய ஆய்வு நூல் வெளிவரவேண்டும்" என்றார்.

ஆசிரியர்கள் திரு. கே. சிதம்பரப்பிள்ளை, மு. வேதாரணியம், தா. வீரசிங்கம் ஆகியோரும் திருவாளர்கள் ராஜஸ்ரீகாந்தன், சி. க. இராஜேந்திரம், திரு. எஸ். கணேசன் ஆகியோரும் அமரர் டானியலின் பெருமைகளை விதந்து பேசினர்.

பொதுச்செயலாளர், திரு. தி. வரதராசன் நன்றி கூறினார்.

## வரி அதிகரிப்பு குறித்து அமைச்சரிடம் முறையீடு


மட்டக்களப்பு, ஏப். 8

மட்டக்களப்பு மாநகர சபை சோலைவரி அதிகரிப்பு குறித்து வரியிறுப்பாளர் சங்க தூதுக்குழு அண்மையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையைச் சந்தித்து வரி அதிகரிப்பு இடை நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியது.

சங்க உபதலைவர் திரு. ம. சிவனேசராசா, உபசெயலாளர் திரு. எஸ் சவரிமுத்து. உறுப்பினர் திரு. எஸ் சுந்தரம் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றனர்.

அமைச்சரை சந்தித்த குழுவினர், வரி அதிகரிப்பு தற்போதைய சூழ்நிலையில் வரியிறுப்பாளர்களை பெரிதும் பாதித்துள்ளது என்று தெரிவித்தனர்.

உயிர், உடைமை பாதுகாப்பு இல்லாத நிலையில்- மக்கள் கஷ்டப்படுகின்ற நேரத்தில்- இந்த அதிகரிப்பு மக்கள் கஷ்டம் புரியாமல் ஆணையாளரின் தனிப்பட்ட முடிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரிவித்தனர்.



பொய்யாமொழி

குறள்:
அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

பொருள்:
அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தி விடும்.

# இந்தவாரம் திருகோணமலையில் கடற்படை யுத்தம் நிகழலாம்

## 'சண்டே ஐலண்ட்' ஜோசியர் ஆரூடம்

இந்த வாரம் வடகிழக்குப் பகுதியில் (திருகோணமலை) படையினருடன் பெரிய மோதல் ஒன்று இடம் பெறும்.

இது கடற்படையின் மீதான தாக்குதலாக இருக்கலாம். பெரும்பாலும் கடற்படை யுத்தமாக இருக்கவும் கூடும்.

இப்படி கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே ஐலண்ட்' (6-4-1986) இதழில் வாரபலன் பகுதியில் ஆரூடம் கூறப்பட்டுள்ளது.

அந்த ஆரூடத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஏப்ரல் 9 ஆம் திகதி காலை 9 39 க்கும் பிற்பகல் 2·02 க்கு இடையில் சூரிய கிரகணம் ஏற்படவுள்ளது. இது பூரண சூரிய கிரகணம் அல்ல. இது இலங்கையில் தெரியாது.

இதனுடன் இணைந்து முக்கிய கிரக மாற்றம் ஒன்றும் இடம் பெறவுள்ளது. மீனராசியில் சூரியன் குடியிருக்கிறார். புதன் பலவீனமடைகிறார். இது ஏப்ரல் 11 இல் மீண்டும் இடம் பெற உள்ளது.

இக்கிரக மாற்றம் பல நாடுகளில் அரசாங்கங்களுக்கு சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தும்.

பல நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படலாம்.

வழமைக்கு மாறான இக்கிரக சேர்க்கைகள் பல உலக நாடுகளில் சதிச் செயல்கள், வேலை நிறுத்தங்கள், மக்கள் எழுச்சி முதலியன வற்றை ஏற்படுத்தும்.

இதன் மூலம் அரசாங்கங்கள் பலவீனம் அடையும். இராணுவச் சதிகள் ஏற்பட இடமளிக்கும். இவை இறுதியில் வெற்றியளிக்கக் கூடியதாகவும் காணப்படுகிறது.

அரசியல்வாதிகள் பிழைகள் விடவும் கூடும். அவர்களை எதிர்ப்பவர்கள் அவர்களை வெல்லுவதற்கு நல்ல சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

இலங்கையின் நிதி நிலைமை மேலும் மோசம் அடையும்.

ஆயுதங்களுக்கான செலவீனம், கடற்படை நடவடிக்கைகள் மோசமான நிலைக்கான திருப்பத்தை எடுக்கும்.

இந்திய அரசியல் வாதிகளுக்கும் இது கூடாத காலம். இராணுவ பலத்தை வைத்து நாட்டை ஆள அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவர்.

பாரதூரமான உள்நாட்டுப் பிரச்சினைகள் ஏற்படும். ராஜதந்திர உறவுகள் கீழ் நிலையை அடையும்.

சமயத் தலைவர்களால் உலக விவகாரங்களில் குழப்பநிலை ஏற்படும்.

பல நாடுகளில் இன, மத ரீதியான மோதல்கள் மீண்டும் தலை தூக்கும்.

தற்போதைய கிரக நிலையில் இந்தத் தீமைகள் ஏற்படும். பாதிச் சூரிய கிரகணத்தின் பலன்களும் இவற்றைத் தான் காட்டுகின்றன:

இந்தத் தீமையான பலன்கள் உடனடியாகத் தெரியமாட்டா. எதிர்வரும் மாதங்களில் தெரியலாம்.

சூரிய கிரகணத்தின் தீமையான பலன்கள் தெரிபட சிலவேளை 12 மாதங்களும் செல்லக் கூடும்.

இப்படி 'சண்டே ஐலண்ட்' தனது வாரபலனில் ஆரூடம் கூறியுள்ளது.

## வருடாந்த பொதுக் கூட்டம்

நீர்வேலி, ஏப். 8

அருள்மிகு நீர்வேலி வாய்க்கால்தரவைப் பிள்ளையார் கோயில் வழிபடுவோர் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை சபைத் தலைவர் த. மயில்வாகனம் தலைமையில் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளை அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

சபையின் நிர்வாகசபை தெரிவும் [illegible] சபைத் தெரிவும் நடை[illegible]

## வைத்திய அதிகாரிகள் இல்லாக்குறை

நல்லூர், ஏப். 8

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் இல்லாததன் காரணமாக நோயாளிகள் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் வடமராட்சிப் பகுதி மக்களும் ஏனைய பிரதேசங்களிலிருந்து இந்த வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருபவர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மக்கள் அவசர சிகிச்சை பெறுவதில் அதிகநெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்கள் என அல்வாய் அநீதி ஒழிப்பு ஒன்றியம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

## கால்நடைகள் பெருமளவில் மடிவு புங்குடுதீவில் நிலைமை

புங்குடுதீவு, ஏப். 8

புங்குடுதீவில் கால்நடைகள் பெருமளவில் மடிகின்றன. தீவிரமாகப் பரவி வரும் கால்நடைத் தொற்று நோயே இதற்குக் காரணமாகும். இதனால் இங்குள்ள கால்நடை வளர்ப்போர் பெரும் கவலையடைந்துள்ளனர்.

கால்நடை வைத்திய அதிகாரிகள் இக்கால்நடை நோயைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலவும் கடும் வரட்சியிலும் கால்நடைகள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

## சித்திவிநாயகர் கோயில் வீதி புனரமைப்பு

பருத்தித்துறை, ஏப். 7

வல்விபுரம் குருக்கட்டு சித்திவிநாயகர் ஆலயத்தின் சுமார் 400 யார் நீளமான வீதி சிரமதான மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

மாரிகாலத்தில் ஆலய வழிபாடு செய்ய வரும் அடியார்கள் பெரிதும் கஷ்டமுறுவதால் இவ்வீதியை உடனடியாகப் புனரமைக்க ஆலய பரிபாலனசபை தீர்மானித்தது.

இத் திருப்பணியில் பங்குபற்ற விரும்பும் பொது ஸ்தாபனங்களை ஆலய திருப்பணிச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலய முகாமையாளர் கேட்டுள்ளார்.

## எழுவைதீவுக்கும் கரம்பனுக்கும் இடையே பயணிகள் படகுச் சேவை

### கடற்படைத் தளபதி அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 8

எழுவைதீவுக்கும் கரம்பனுக்கும் இடையே பயணிகள் படகுச்சேவை நடத்த காரைநகர் கடற்படைத் தளபதி அனுமதி வழங்கியிருக்கிறார்.

இதன்படி எழுவைதீவு இறங்குதுறையில் இருந்து காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இரண்டு படகுச் சேவைகள் கரம்பன் கண்ணகி அம்மன் கோயிலடிக்குச் செல்லும்.

கரம்பனில் இருந்து இப்படகுச் சேவைகள் பிற்பகல் 1 மணிக்கும் 4 மணிக்கும் எழுவைதீவுக்குத் திரும்பும்.

இப்படகுச் சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு வசதியாக ஊர்காவற்றுறையில் இருந்து கரம்பன் இறங்குதுறைக்கு தனியார் பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எழுவைதீவுப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ப. வே. தேவராசா தலைமையிலான குழு ஒன்று காரைநகர்க் கடற்படைத் தளபதி திரு. ஜெயமான்னவைச் சந்தித்து படகுச் சேவை இன்றி எழுவைதீவு மக்கள் படும் கஷ்டம் பற்றி எடுத்து உரைத்தனர்.

அதைத் தொடர்ந்தே படகுச் சேவை நடத்த கடற்படைத் தளபதி அனுமதி வழங்கினார்.

இச்சந்திப்புக்கு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர் ஏற்பாடு செய்திருந்தார்.

இப்படகுச் சேவை வழமையான சோதனைக்[illegible] கடற்படைத் தளபதி அதி[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**BECON**

156 3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**88 A/L**

Maths — திரு. நல்லையா
Physics — திரு யோகேந்திரா
Chemistry — திரு அன்ரன்
Zoology — திரு. தம்பிராஜா
Botany — திரு. ஸ்ரீசரன்

ஆரம்பம்: 13 — 4 — 1986



# உதயன்

08. 04 1986 செவ்வாய்க்கிழமை



**BECON**

**87 A/L 88**

பொருளியல் - திரு. வரதராஜன்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
அளவையியல் - திரு. S. S. மனோகரன்
வர்த். நிதியும் - திரு. ரட்ணம்
புவியியல் - திரு. சண்முகராஜா
இந்து நாகரிகம் - திரு. அருள்நங்கை
தமிழ் - விரிவுரையாளர்
அரசியல் - திரு. சீலன்

ஆரம்பம்: 12 - 4 - 1986


# இன ஒடுக்கு முறைக்கு எதிராக எதிர்ப்புத் தினம்

## பேராளர் மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக எதிர்ப்புத் தினம் நடத்துவது என்று 16 அமைப்புக்களின் பேராளர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இப் பேராளர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது

சுமார் 600 பேராளர்கள் மனோகரா தியேட்டரில் நடந்த இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டுத் தலைமைக் குழுவின் சார்பில் இணைப்புக் குழுச் செயலாளர் திரு எஸ்.விஜயானந்தன் மாநாட்டில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசினார்.

இலங்கை அரசாங்கத்தைக் கோரும் பின்வரும் பிரேரணை இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

பிரேரணை வருமாறு:-

1. தமிழ்பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அவர்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் அவர்கள் ஏற்கக்கூடிய முறையில் தேசிய இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படவேண்டும்.

2. தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் சகல இராணுவத் தாக்குதல்களும் நிறுத்தப்படுவதுடன், அரசின் சகல ஆயுதப்படைகளும் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து முற்றாக அகற்றப்படவேண்டும்

3. சிறைகளிலும் தடுப்புக் காவலிலும் உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

4 1,000 மீட்டர் பாதுகாப்பு வலயம், மீன்பிடித் தடை போன்ற சகல அடக்குமுறைப் பிரமாணங்களும் அவற்றுக்கு வழிவகுக்கும் அவசரகாலச் சட்டமும் அகற்றப்பட வேண்டும்.

5. தமிழ்பேசும் பிரதேசங்களில் அரசினால் திட்டமிட்டு இனரீதியில் குடியேற்றுதலும் அப்படிக் குடியேறுபவர்களை ஆயுதபாணிகளாக்குவதும் நிறுத்தப்பட வேண்டும்.

6. வடக்கு — கிழக்கு மலையகம் உட்பட சகல பிரதேசங்களிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான சகல வன்முறைகளும் கைவிடப்பட வேண்டும்.

### காணவில்லை

காலஞ்சென்ற திருமதி. தேவசகாயம் மனோன்மணியின் [வர்ணப்] புதல்வன் அருள் நேசனைக் கடந்த 3-4-86 முதல் காணவில்லை. இவரின் வயது 16. பொது நிறம். உயரம் 4 அடி தலையை மொட்டையாக வெட்டியுள்ளார் இவரைக் காணுததால் இவரின் தாயார் அறிவு மயங்கிய நிலையில் இருக்கின்றார். எனவே இவர் பற்றித் தகவல் தெரிந்தவர்கள் கீழ்வரும் விலாசத்துடன் உடனே தொடர்பு கொள்ளவும். தொடர்பு! திருமதி. தேவசகாயம் மனோன்மணி, 2ம் வட்டாரம், புங்குடுதீவு.

## சுதந்திரப் போரில் தமிழர்களுக்கு வெற்றி

### உறுதி என்கிறார் அமைச்சர் பண்ருட்டி

சென்னை, ஏப்ரல் 7

இலங்கைத் தமிழர் தங்கள் சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெறுவார்கள்.

தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் இப்படி நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழர் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் நினைவு தினக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது

அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இராமச்சந்திரன் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் சம்பந்தமான பேச்சுக்களில் இந்திய அரசுத் தலைவர்களுடன் நெருங்கியதொடர்பு வைத்திருப்பவர் திரு இராமச்சந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் அமைச்சர் தந்தை செல்வநாயகத்தின் படத்தைத் திரை நீக்கஞ் செய்து வைத்தார்.

தொழில் அமைச்சர் திரு. கே. இராஜாராம் பேசுகையில்,

"இலங்கைத் தமிழர் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருந்தவர் தந்தை செல்வா. உரிமைகளுக்காகப் போராட தமிழரைத் தூண்டியவரும் அவரே." — என்று சொன்னார்

கல்வி அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ அமிர்தலிங்கம், திரு.எஸ். சி சந்திரகாசன் ஆகியோரும் பேசினர்.


### விற்பனைக்கு

பேர்ணிவல் (Fernival) ரக 28 அங்குல காகிதம் வெட்டும் இயந்திரம் (பிரிட்டிஷ் தயாரிப்பு) விற்பனைக்கு உண்டு நல்ல நிலை 42 அங்குல தானியங்கி (ஓட்டோமற்றிக்) காகிதம் வெட்டும் இயந்திரத்தை வாங்கிக் கொண்டு இதனை மாற்றுகக் கொடுக்கவும். விருப்பம். தனிமையாகவும் விற்கப்படும்.

தொடர்பு கொள்க:
விளம்பர இல: 15 மே/பா
உதயன், த. பெ. எண்: 23
யாழ்ப்பாணம்.



### தேவை

அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் உபகரணங்கள் தேவை :

1. துளையிடும் இயந்திரம் – ஒன்று
2. பைன்டிங் (புக்ஸ்காப்) இயந்திரம்–ஒன்று
3 புறாவ் கலிபிறெல் – ஒன்று
4. ஆங்கில, தமிழ் கொம்போஸிங் கேஸ்கள் பாவிக்கக்கூடிய நல்ல நிலையில் இருத்தல் அவசியம். விவரங்களுடன் தொடர்புகொள்க.

விளம்பர இல: 16
மே/பா உதயன்,
த. பெ. எண் : 23
யாழ்ப்பாணம்


## தமிழக அமைச்சர் கிருஷ்ணசாமி ராஜினமா

சென்னை, ஏப் 7

தமிழக அமைச்சரவையில் இந்து பாலவளத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ராஜினமாச் செய்துவிட்டார்.

தனது இராஜினமாக் கடிதத்தை அமைச்சர் திங்கட்கிழமை மாலை ஆளுநர் எஸ். எல். குரானவைச் சந்தித்துக் கையளித்தார்.

30 நிமிடங்கள் ஆளுநருடன் அமைச்சர் உரையாடினர்.

அமைச்சர் தான் ராஜினமாச் செய்யப்போகும் விஷயத்தைக் காலையிலேயே சட்டசபைக் கூட்டத்தில் வெளியிட்டார்.

திரு கிருஷ்ணசாமியிடம் இருந்த தொழிலாளர் நலத்துறைத் திணைக்களத்தை முதலமைச்சர், அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு மாற்றியதைத் தொடர்ந்து ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாகவே அவர் பதவியை ராஜினமாச் செய்தார்.

எனது பணிமுதலமைச்சருக்குத் திருப்தியளிக்கவில்லைபோல் தெரிகிறது. எனவே அமைச்சராகத் தொடர்ந்து இருக்கக்கூடாது - என்று திரு கிருஷ்ணசாமி சட்டசபையில் சொன்னர்.

தி. மு க பிரமுகரும் சட்டசபைச் சபாநாயகருமாகக் கடமையாற்றி மறைந்த திரு கே. ஏ. மதியழகனின் தம்பியார் தான் திரு. கிருஷ்ணசாமி

தமிழக அமைச்சரவையில் இருந்து 11 அமைச்சர்களை முதலமைச்சர் விலக்க இருப்பதாக சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

### தமிழக . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அவர்களை ஏற்றி வந்த படகுகள் வந்தபோது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன

கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளர் கூட்டம் ஒன்று தமிழகத்தில் இருந்து திரும்பியவர்களைப் பேட்டி கண்டது.

### கூட்டணியினரின் .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பட்டதாக அவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட ஐவரது சடலங்களையும் பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. சாம். தம்பிமுத்து, மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி டொனல்ட் மெண்டிஸுடன் தொடர்பு கொண்டார்

ஐவரின் சடலங்களும் ஞாயிறன்று முகாமுக்கு அருகில் வைத்து எரிக்கப்பட்டு விட்டதாகவும்–

முதல் நாள் கேட்டிருந்தால் தான் அவற்றை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்ததாக திரு. சாம். தம்பிமுத்து தெரிவித்தார்.

கொல்லப்பட்ட ஐந்து பொதுமக்களினதும் விவரம் வருமாறு.

1. கந்தையா தேவராஜா (வயது 28). மகிழவெட்டுவானைச் சேர்ந்தவர் ஆயுதப்படையினரே இவரது சடலத்தை அடையாளம் காட்டினர்

2. உன்னிச்சை ஆஸ்பத்திரி தொழிலாளி எஸ். சோமன் (வயது 18).

3. ம. சௌந்தரராஜா (வயது 30). விவசாயி.

4. க. சினித்தம்பி வயது 85) விவசாயி ஒரு குழந்தைக்குத் தகப்பன்.

5. கே. பாலையா (வயது 30) விவசாயி. ஒரு குழந்தைக்குத் தகப்பன்.

### தீவுப்பகுதி . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வேலணை உதவிஅரசாங்க அதிபர்களுக்கும், யாழ் மாவட்ட பிராந்திய மின்சார பொறியியலாளருக்கும் முறையிட்டுள்ளார்.

மின்விநியோகம் தடைப்பட்டிருப்பதால் வேலணை,புங்குடுதீவு,ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கிடையிலான குழாய்நீர், குடிதண்ணீர் விநியோகமும் தடைப்பட்டிருக்கிறது. பல தொழிற்சாலைகளும் இயங்காமல் இருக்கின்றன.

தீவுப்பகுதி எங்கும் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது.

### தமிழ் அகதி ..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கின்றது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் போலந்து, ருமேனியா, கிழக்குஜெர்மனி நாடுகளில் இருந்து வந்த ஜெர்மனியர்களைத் தங்கவைப்பதற்குக் கட்டப்பட்ட கங்கிரீட் கட்டடங்களில்தான் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஜெர்மனிக்குள் வந்துதான் இலங்கைத்தமிழ்அகதிகள் பின்னர் மேற்கு ஜெர்மனி வருகிறார்கள். கிழக்கு ஜெர்மன் ஏஜண்டுகள் தான் அவர்களை அனுப்புகிறார்கள்.

இப்படி டாக்டர் லீபர் மென் கேட்டார்.

இதேவேளை மேற்கு ஜெர்மன் அதிகாரிகள் தெரிவித்த சில கருத்துக்கள் வருமாறு:

கிழக்கு ஜெர்மனிவரும் தமிழ் அகதிகளை மேற்கு ஜெர்மனிக்கு அனுப்புவது குறித்து கிழக்கு ஜெர்மனி அரசிடம் மேற்கு ஜெர்மனி அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

இருந்தாலும், மேற்கு ஜெர்மன் வரும் தமிழ் அகதிகள் தங்களுக்கு இலங்கையில் உயிராபத்து உண்டு என்பதை நிரூபித்தால் நாம் அவர்களை ஏற்றுக்கொள்வோம்— என்றனர்.

## நாடாளுமன்றத்திற்கு கூட்டணியினர் வரலாம்

### ஆனால் ஒற்றையாட்சியை ஏற்கவேண்டும்

### ஜனதிபதியின் பேட்டி

லண்டன், ஏப். 7

ஒற்றையாட்சி அரசமைப்புக்கு விசுவாசமாக இருந்தால்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாடாளுமன்றம் வருவதை பூரணமாக வரவேற்போம்.

கூட்டணி எம் பிக்களை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றிய அரசமைப்புச் சட்டத்தின் 6 ஆவது ஷரத்தை ரத்துச் செய்யத்தயார்

இப்படி ஜனதிபதி ஜெயவர்த்தன லண்டன் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த விசேட பேட்டியில் சொன்னர்.

திரு ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது;

போராளிகள் தங்கள் இயக்கங்களைக் கைவிட்டவுடன் ஆயுதப்படையினர் முகாம்களுக்குள் வைக்கப்படுவர்; போராளிகளுடன் அரசு பேச்சுக்கள் நடத்தும்.

அதுவரை டில்லியில் 1985 ஆகஸ்டில் இலங்கை கையெழுத் திட்ட யோசனைகள் குறித்து இணக்கம் காண இலங்கை அரசு எவருடனும் பேச்சு நடத்தாது

ஜனநாயக விரோதமான தமிழ்– சிங்கள சக்திகள் ஒன்று சேர்ந்து மார்க்ஸிய அரசு ஒன்றை நிறுவ முயற்சிக்கின்றன

சில வாரங்களுக்கு முன்னர் ஒரு வீடு நிறைய ஆயுதங்கள் பிடிக்கப்பட்டன. இன்னெரு வீடு பயிற்சி பெற பாவிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது

சிங்கள சக்திகளும் ஒன்று சேருகின்றன என்பதற்கு நிறையச் சாட்சியங்கள் கிடைத்துள்ளன.

நிலைமை பாரதூரமானது. ஜனநாயக நடைமுறையைப் பேணுவதற்கு நான் என்னலான முயற்சிகளை செய்து வருகின்றேன்.

யாழ் குடா நாட்டில் இராணுவம் முகாம்களில் உள்ளன. தீவிரவாதிகள் தான் பூரண கட்டுப்பாட்டில் யாழ் குடா நாட்டை வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை மீட்பது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. நான் என்ன செய்ய முடியும்? அதன் கருத்து அப்பாவிமக்களைக் கொல்வதுதான்

எனக்கு ஆலோசனை தரும் செய்தியாளர்களிடம் நான் சொல்வது இதுதான். ஒருநாளாவது எனது வேலையை வந்து பாரமெடுத்துப் பாருங்கள் என்று அவர்களுக்குக்கூறவிருப்புகின்றேன்.

இப்படி திரு ஜெயவர்த்தன சொன்னர்.

## ஜீ.சீ.ஈ.பரீட்சைமுடிவுகள்

### வடக்கில் பாடசாலைகள் திருப்தி

நல்லூர், ஏப்ரல் 8

யாழ் நகர பாடசாலைகளில் இருந்து ஜீ சீ ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பரீட்சை முடிவுகள் ஞாயிற்றுக் கிழமையன்று வெளியாகின.

அனேகமான பாடசாலைகள்,பரீட்சை முடிவுகள் குறித்து திருப்தி தெரிவித்திருக்கின்றன.

வேம்படி மகளிர் கல்லூரியில் இரண்டு மாணவிகள் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

செல்வி அனுஷியா அருணசலம், செல்வி யசோதா தயாபரன் ஆகிய இருவருமே அவர்கள்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் செல்வி என். நாகரட்ணம் என்ற மாணவியும் —

இந்து மகளிர் கல்லூரியில் செல்வி பூரணி கந்தசாமி என்பவரும் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளார்.

சென் ஜோன் கல்லூரியில் திலீபன் என்ற மாணவன் எட்டுப் பாடங்களில் விசேட சித்தியும் வேறு மூன்று பேர் ஏழு பாடங்களில் விசேட சித்தியும் பெற்று உள்ளனர்

யாழ் மத்திய கல்லூரியில் ஒரு மாணவன் 7 பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளார்

யாழ் இந்துக் கல்லூரியில் எட்டு மாணவர்கள் 7 பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் இன்னும் சில தினங்களில் தபால் மூலம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இனப் பிரச்சினைத் தீர்வு

## சிறிமா தனது மகா இரகசியத்தை கூற வெட்கப்படுவதேன்?

### பிரதமர் கேட்கிறார் இப்படி

கொழும்பு, ஏப் 8

தமிழர் பிரச்சினைக்கு 24 மணித்தியாலத்தில் தீர்வு காணுவேன் என்று கூறும் சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எப்படித் தீர்வுகாணப்படும் என்ற அந்த 'மகா இரகசியத்தை' வெளியே சொல்ல ஏன் வெட்கப்படுகிறார்?

இப்படிப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ கேட்டார்.

அக்மீமன உபதேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில், "திருமதி பண்டாரநாயக்காவின் அந்த மகா இரகசியம் சந்திரனில் இருந்து அரிசி கொண்டு வருவேன் என்று சொன்னது போல் ஆகிவிடுமோ?" –என்றும் திரு. பிரேமதாஸ சொன்னர்,

தனி நாட்டைத் தவிர வேறு எதற்கும் தயார் இல்லை என்றும் தீவிரவாதிகள் கூறிவிட்டார்கள்.

தீவிரவாதிகள் தனி நாடு கோருவது அம்புலிமாமாவைக் கேட்டு அழுவது போலாகும் என்று ஜனதிபதி கூறிவிட்டார்.

இந்த நிலையில் திருமதி பண்டாரநாயக்கா 24 மணித்தியாலத்தில் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று அவரின் மகன் அனுரா கூறுகிறார்.

வடக்கு – கிழக்கை இணைத்து தனிநாடு ஒன்றை உருவாக்கி தீவிரவாதிகளுக்கு வழங்க இரகசிய ஒப்பந்தம் ஏதும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா செய்து கொண்டுள்ளாரா?

இப்படி திரு பிரேமதாஸ வினவினர்.

### இனந் தெரியாத இளைஞரின் சடலம்

சாவகச்சேரி, ஏப்ரல் 8

இனந்தெரியாத இளைஞரின் சடலம் ஒன்று சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஞாயிறு அதிகாலை முதல் காணப்பட்டது.

அனுதரவான நிலையில் இருந்த சடலம் அடையாளம் காணப்படுவதற்காக சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது

செவ்வாய் நண்பகல் வரை இந்தச் சடலம் அடையாளம் காட்டப்படாதுவிடில் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ந. தர்மேந்திரன் அறிவித்துள்ளார்.


## மலிவு விற்பனை

**SVP சீவம் ஸ்தாபனத்தாரின், புதுவருட மலிவு விற்பனை.**

சகல விதமான புடவை வகைகளும், சிறுவர், சிறுமிகளுக்கான தயாரித்த உடுப்பு வகைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**SVP சீவம்**
(நவீன சந்தை)
14 'A' மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


உ

### திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 28ஆம் நாள் (10-4-86) வியாழக்கிழமை பகல் 10.15 மணி தொடக்கம் 12.25 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| திருநிறை செல்வன் | | திருநிறை செல்வி |
|---|---|---|
| ஜெகநாதன் | ★ ★ ★ ★ ★ | நந்தினி |
| (லங்கா சீமெந்து லிமிட்டெட் K.K.S.) | | (அரசினர் வைத்தியசாலை. அம்பாறை.) |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்,

திரு. திருமதி நா. செல்லையா
Dr. & Dr. (Mrs,) நாகநாதர்
'தேவி வாசம்', சங்கானை.

திரு. திருமதி ச. கணேசன்
வேளா தோட்டம்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம். அச்சகம்: 15,8 ஆம் ஒழுங்கை [illegible] யாழ்ப்பாணம்.
வெளியீட்டு திகதி 08-04-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ/60 N 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org